செய்தி வெளியீடு எண்: 030 நாள்: 11.01.2019

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 10.1.2019 அன்று தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத் துறை சார்பில் சென்னை, மயிலாப்பூர், அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிலில் 16 கோடியே 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அதிநவீன திருமண மண்டபம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டம், சோமாசிபாடி, அருள்மிகு பாலசுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் 53 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அன்னதானக்கூடம் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள். மேலும், 36 கோடியே 82 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள திருமண மண்டபங்கள், யாத்ரி நிவாஸ்கள், ஓய்வுக்கூடம் ஆகியவற்றிற்கு அடிக்கல் நாட்டினார்கள்.

தமிழ்ப் பண்பாட்டின் பெட்டகமாகவும், ஆன்மீகத்தின் இருப்பிடமாகவும், கலைத்திறனின் நிலைக் களமாகவும் விளங்குகின்ற திருக்கோயில்களின் சொத்துக்களைப் பாதுகாத்து பராமரிப்பது, அன்றாட பூஜைகள் தங்கு தடையின்றி நடப்பதை உறுதி செய்வது, பக்தர்களுக்கு தேவையான வசதிகளை செய்து கொடுப்பது போன்ற பணிகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத் துறை மூலமாக முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், சென்னை, மயிலாப்பூர், அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிலில் 2.447 ஏக்கர் பரப்பளவில், தரைத்தளத்தில் குளிர்சாதன வசதியுடன் கூடிய 475 இருக்கைகள் கொண்ட உணவு அருந்தும் இடம், முதல் தளத்தில் 1000 இருக்கைகள் கொண்ட திருமண நிகழ்ச்சிக்கூடம், 80 இருக்கைகள் கொண்ட முக்கிய பிரமுகர்கள் உணவு அருந்தும் இடம், 14 தங்கும் அறைகள் உள்ளிட்ட அனைத்து வசதிகளுடன், 16 கோடியே 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அதிநவீன திருமண மண்டபம்;

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பென்னாத்தூர் வட்டம், அருள்மிகு அருணாச்சலேசுவரர் திருக்கோயிலின் உபகோயிலான சோமாசிபாடி அருள்மிகு பாலசுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் 244.94 சதுர மீட்டர் பரப்பளவில், சுமார் 50 சேவார்த்திகள் உணவு உட்கொள்ளும் வசதியுடன் 53 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அன்னதானக் கூடம்;

என மொத்தம் 17 கோடியே 28 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான திருமண மண்டபம் மற்றும் அன்னதானக் கூடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

மேலும், திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டம், புதுக்காமூர் அருள்மிகு புத்திரகாமேஸ்வரர் திருக்கோயிலில் 2 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், கீழ்பென்னாத்தூர் வட்டம், வேட்டவலம், அருள்மிகு அகத்தீஸ்வரர் திருக்கோயிலில் 1 கோடியே 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் கட்டப்படவுள்ள திருமண மண்டபங்கள், திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் வட்டம், ஆலங்குடி அருள்மிகு ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோயிலில் 6 கோடியே 71 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், காஞ்சிபுரம், அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயிலில் 24 கோடியே 65 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் கட்டப்படவுள்ள யாத்ரி நிவாஸ் கட்டடங்கள், நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், அருள்மிகு வேதாரண்யேஸ்வரர் திருக்கோயிலில் 1 கோடியே 86 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள ஓய்வுக் கூடம் ஆகிய கட்டடங்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் திரு.பா. பென்ஜமின், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேவூர் எஸ்.இராமச்சந்திரன், சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.அபூர்வ வர்மா, இ.ஆ.ப., இந்து சமய அறநிலையத்துறை முதன்மைச் செயலாளர் / ஆணையர் திரு.தா.கி.ராமச்சந்திரன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**